செ.வெ.எண்:24/ஜுன் நாள்:12.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## தேசிய குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, தொழிலாளர் துறையின் சார்பாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

தேசிய குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தைத் முன்னிட்டு இன்று (12.06.2017) இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரத்தில் தொழிலாளர் துறையின் சார்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு குறித்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

குழந்தைகளை பணிக்கு அனுப்பாமல் கல்வி கற்க பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி குழந்தை தொழிலாளர் முறையினை முழுவதுமாக அகற்றிட விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் ஆண்டு தோறும் ஜுன் மாதம் 12-ஆம் நாள் தேசிய குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், இன்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் அரண்மனை சாலையில் தொழிலாளர் துறை மற்றும் பள்ளிக் கல்வித்துறையின் சார்பாக பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற குழந்தை தொழிலாளர் முறை அகற்றுவதற்கான விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணியில் ஸ்வார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளி, புனித அந்திரேயா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராஜா மேல்நிலைப்பள்ளி, டி.டி.விநாயகர் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர். இப்பேரணியானது அரண்மனை வாசலில் துவங்கி அரண்மனை சாலை, பெரிய பஜார் வழியாக சென்று ஸ்வார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நிறைவு பெற்றது.

அதனைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், அனைத்து துறை அரசு அலுவலர்களும் குழந்தை தொழிலாளர் முறை தின எதிர்ப்பு உறுதிமொழியினை எடுத்துக் கொண்டனர். மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொழிலாளர் துறையின் சார்பாக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு குறித்த விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை முதல் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) திரு.பாலசுப்பிரமணியன், மாவட்ட தொழிலாளர் ஆய்வாளர் திரு.ஜெ. காளிதாஸ், சைல்டு லைன் இயக்குநர் திரு.கருப்பசாமி, உட்பட அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**